நீதி அமைச்சின் சுற்றறிக்கை – 02/2023 (ii)

எனது இலக்கம் : MOJ/E9/8.ஶ.ஜ./2021

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்

அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

கொழும்பு 10.

2024.06.11

சகல மேல் நீதிமன்ற நீதவான்கள்,
சகல மாவட்ட நீதவான்கள்,
சகல நீதவான் நீதிமன்ற நீதவான்கள்,
சகல தொழில் நியாய சபைகளின் தவிசாளர்கள்,
பதிவாளர், உயர் நீதிமன்றம்,
பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றம்.

**நீதி மற்றும் தொழில் நியாய சபைகளினால் வெளியிடப்படும் பிரதிகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளுக்கான கட்டணம்.**

மேற்படி விடயத்துடன் தொடர்பாக வெளியிடப்பட்ட நீதி அமைச்சின் 2023.07.10 ஆம் திகதிய மற்றும் 02/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையும் 2023.09.12 ஆம் திகதிய மற்றும் 02/2023(i) ஆம் இலக்க சுற்றறிக்கையும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

02. அதன்படி, 2024.06.11 ஆம் திகதி முதல் நீதிமன்றம் மற்றும் தொழில் நியாய சபைகளினால் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை வெளியிடுகின்ற போதும் அதற்கான கட்டணங்களை அறவிடுகின்ற போதும் நீதி அமைச்சினால் முன்னர் வெளியிடப்பட்ட 2006.06.01 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை நீதி அமைச்சின் 1997.10.06 ஆம் திகதிய 13/97 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளை பிரயோகிக்கும் படி அறிவிக்கப்படுகின்றது.

03. உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை வெளியிடும் செயன்முறையுடன் தொடர்பான காகிதப் பொருட்களுக்கு மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்படாததுடன் இருக்கின்ற ஏற்பாடுகளை வரையறைக்குட்பட்ட வகையில் அமைந்ததாக செலவு முகாமைத்துவத்தினை மேற்கொள்ள வேண்டுமென மேலும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஒப்பம்/

**எம்.என். ரணசிங்க**

செயலாளர்

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

பிரதிகள்

1. செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழு
2. பிரதான நிதி அலுவலர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு
3. பிரதான உள்ளக கணக்காய்வாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு